DHL WORLDWIDE EXPRESS
C/o COSMOS
MARKETING SERVICES.
120, K. K. S. Road Jaffna.

பக்கம் 1

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

துரித தபால் சேவைக்கு இன்றே நாடுங்கள்!
DHL International
யாழ்ப்பாணத்திலும் உரிய இடத்தில் கிடைக்கவும் சகல வெளிநாட்டு தபால்களையும் எம்மிடம் ஒப்படைக்கவும்.

சுடர் 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 27 வியாழக்கிழமை (12-09-1991) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 282

# சுயநிர்ணய உரிமைப் போர் தமிழகத்திலும் அரும்புகிறது!

## வேலூர் மாநாடு ஒரு முன்னோடியே!!

சென்னை, செப். 12

தமிழகத்திலும் சுய நிர்ணய உரிமைப் போராட்டம் ஒன்றைத் தொடங்குவதற்கான அடித்தள ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

'இந்திய சமஷ்டி அரசமைப்பின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்கள், தமிழக மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவில்லை. ஒரு சுதந்திரமான அரசை உருவாக்கி, தமிழர்கள் தங்களைச் சுயாதீனமாக ஆள்வதற்கு வழி செய்யவில்லை.'—என்று கருதும் அரசியல் சிந்தனையாளர்கள் பலர் சேர்ந்து சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைத் தொடங்க திட்டமிட்டுள்ளனர்.

வேலூரில் அண்மையில் நடைபெறவிருந்து தடை செய்யப்பட்ட மாநாட்டின் பின்னணியில் முன்சொன்ன பல அரசியல் சிந்தனையாளர்களே உள்ளனர். அது ஒரு முன்னோடி நடவடிக்கை— என்றும் கருதப்படுகிறது.

தமிழக அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக என்றுமில்லாதவாறு வெகு தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடு செய்து வரும் இவ்வேளையில்—

வேலூர் மாநாட்டை நடத்தத் திட்டமிட்டிருந்ததும்—

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகத் தமிழகத்தில் பரவலாகச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருவதும்—

தமிழீழப் போராட்டத்தையும், தமிழக சுயநிர்ணய உரிமை விவகாரத்தையும் ஒரே சம தளத்தில் வைத்து அரசியல் கருத்துக்கள் பரப்பப்பட்டு வருவதும்—

தமிழகத்திலும் தனி நாட்டுப் போராட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கான அறிகுறியே என்று அரசியல் அவதானிகள் மேலும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## புலிகளுக்கு ஆதரவாக தமிழகத்தில் 'சுவரொட்டி

சென்னை, செப். 12

மதுரை உட்பட தமிழகத்தின் பல பகுதிகளிலும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன என்று தமிழக சட்டசபையில் நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டது.

தமிழக சட்டசபை பட்ஜட் கூட்டத் தொடர் ஒத்தி வைப்புப் பிரேரணையில் பேசும் போது இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ. திரு. குமரி அனந்தன் இதைத் தெரிவித்தார்.

புரட்சிகர விடுதலை முன்னணி என்ற பெயரில் வெளியிடப்பட்ட இந்த சுவரொட்டிகளில் உள்ளத்தை உருக்கும் வாசகங்கள் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா "தனக்கும் அது பற்றித் தகவல் கிடைத்துள்ளதாகவும் அது தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறினார். (த)

## மதுரை நகரில் கூட்டம் நடத்தியோர் கைதாவர்?

சென்னை, செப். 12

மதுரையில் கடந்த சனிக்கிழமை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் கூட்டம் நடத்திய புரட்சிகர இளைஞர் முன்னணி என்ற அமைப்பைச் சேர்ந்த இருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கூட்டத்தை நடத்துவதற்காக தீவிரமாகச் செயற்பட்ட மேலும் 18 இளைஞர்கள் விரைவில் கைது செய்யப்படுவர் என்று தமிழக பொலீஸார் தெரிவித்தனர்.

கூட்டத்தில் உரையாற்றியவர்கள் அரசுக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் விதத்தில் பேசினார்கள் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

இதேவேளை—

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் சுவரொட்டிகளும் சில இடங்களில் பறிமுதல் செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## வேலூர் தமிழீழ மாநாடு:

# கைதாகி விடுதலையானோரில் அனேகர் தமிழ் அறிஞர்கள்!

சென்னை, செப். 12

தமிழ்நாடு வேலூரில் கடந்த முதலாம் திகதி நடைபெற இருந்த தமிழீழ ஆதரவு மாநாடு தடைசெய்யப்பட்டு 80 பேர் வரை கைதாகி பின்னர் விடுவிக்கப்பட்டனர் அல்லவா? அவர்களில் தமிழறிஞர் பெருஞ்சித்திரனார், அவரது மகன் பொழிலன் ஆகியோரும் அடங்குவர்.

விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த மாநாட்டை தமிழகப் பொலீஸார் கடைசி நேரத்தில் தடை செய்தது தெரிந்ததே.

மாநாடு நடக்கவிருந்த இடத்தில் பேராசிரியர் சாலை இளந்திரையனும், பேராசிரியை சாலினி இளந்திரையனும் காணப்பட்டனர். அந்த இடத்துக்குப் பொலீஸார் வந்ததும் அவர்கள் இருவரும் அங்கிருந்து வெளியேறினர்.

அம்மாநாட்டின் முக்கிய பேச்சாளராகக் குறிப்பிடப்பட்டிருந்த பேராசிரியர் தீரன் மாநாட்டின் மண்டபத்தில் காணப்பட்டார். அவரைப் பொலீஸார் கைது செய்யவில்லை. பாட்டாளி மக்கள் கட்சியின் உயர் தலைவர்களில் ஒருவர் பேராசிரியர் தீரன்.

அம்மாநாட்டில் பேசவிருந்த தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பி. நெடுமாறன் மாநாடு நடைபெறவிருந்த இடத்துக்கு வரவில்லை.

சுதந்திர ஈழம், இந்தியா

[3 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் தடை?

### மத்திய அரசு பரிசீலனை

புதுடில்லி, செப். 12

இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது குறித்து இந்திய மத்திய அரசு தீவிர பரிசீலனை செய்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

தென்னிந்திய மாநிலங்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் நடவடிக்கைகள் இடம் பெறாமல் பார்த்துக் கொள்ள அந்த இயக்கத்தினர் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

## தமிழக நடவடிக்கைகள் போராட்டத்தைப் பாதிக்கா!

### தலைவர் பிரபாகரன் பேட்டி

சென்னை, செப். 12

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் காரணமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின போராட்டம் பாதிக்கப்பட மாட்டாது.

இத்தகவலை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. வே. பிரபாகரன் இந்தியப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

தங்களிடம் போதிய உணவும் ஆயுதங்களும் கைவசம் இருப்பதாகவும் திரு. பிரபாகரன் தெரிவித்தார்.

"முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சம்பந்தப்படவில்லை அவரைக் கொலை செய்யவேண்டிய அவசியம் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஏற்படவில்லை"— என்றும் அவர் சொன்னார்.

### முச்சந்தி முரளி



அப்ப ...... மண்டைதீவு மண்டை ஓட்டுத் தீவாய் எல்லோ கிடக்கு ......

## பொன்னாலை நோக்கி ஷெல்

சுழிபுரம், செப். 12

காரை நகரில் இருந்து பொன்னாலைப் பகுதியை நோக்கி செவ்வாய் இரவு 3 ஷெல்கள் ஏவப்பட்டன. சேதம் ஏதும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. (இ-28)

## இருவர் கைது

காத்தான்குடி கார்க்குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக விவேகானந்தராசா என்பவரையும் இன்னொரு நபரையும் கருவாஞ்சிக்குடியில் வைத்து பொலீஸார் கைது செய்தனர் என்று கூட்டுப்படைத் தலைமையலுவலகம் அறிவித்தது. (உ-எ)

## ஆயுதங்கள் மீட்பு

ஹம்பாந்தோட்டை மாவட்டம் பெலியத்தையில் தோட்டம் ஒன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த எட்டு ஷொட்கன்கள் மற்றும் ரவைகளை கடந்த திங்கட்கிழமை பொலீஸார் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

## கிட்டு பிரான்ஸில் இல்லை என்கிறது பிரெஞ்சு தூதரகம்

கொழும்பு, செப். 12

பிரிட்டனில் இருந்து பிரான்ஸுக்குள் நுழைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் கிட்டு தற்போது எந்த நாட்டில் இருக்கிறார்?

கிட்டு இரகசியமான முறையில் பிரிட்டனில் இருந்து பிரான்ஸுக்குள் பிரவேசித்தார் என்றும்—

பின்னர் பிரான்ஸில் இருந்து வேறொரு நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்று விட்டார் என்றும்—

கொழும்பில் உள்ள பிரெஞ்சுத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் கிட்டு பிரான்ஸில் இருந்து எந்த நாட்டுக்குச் சென்றார் என்பது இன்னும் மர்மமாகவே இருக்கிறது.

## புலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு

# இந்தியாவுடன் ஒத்துழைக்க ஸ்ரீலங்கா அரசு இணக்கம்

புதுடில்லி, செப். 12

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு இந்திய அரசுடன் விரிவான அளவில் ஒத்துழைக்க சிறிலங்கா அரசு முன்வந்துள்ளது.

புதுடில்லி ராஜ்ய சபைக் கூட்டத்தில் நேற்றுக் கேள்வி நேரத்தின் போது மத்திய வெளியுறவு இணை அமைச்சர் எட்வர்டோ பெலரோ இத்தகவலை வெளியிட்டார்.

சிறிலங்கா அரசின் கருத்தை அண்மையில் அரசப் பயணமாக புதுடில்லிக்கு விஜயம் செய்த அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தினார் என்றும் அவர் சொன்னார். [உ-எ]

# 10 மனித எலும்புக் கூடுகள் நேற்றும் மண்டைதீவில் மீட்பு!

## இதுவரை 34 எலும்புக் கூடுகள் கண்டுபிடிப்பு!!

வேலணை, செப். 12

மண்டைதீவுப் பகுதியில் நேற்றும் பத்து மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. மண்டைதீவுப் பகுதிகளில் இருந்து கடந்த இரண்டொரு மாதங்களில்—நேற்று வரை— 34 மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்காப் படையினரால் மூடப்பட்டிருந்த கிணறுகளில் இரண்டு, நேற்று முன்தினம் தோண்டப்பட்டபோது, 8 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன.

அந்த இரு கிணறுகளில் நேற்றும் மீட்பு வேலைகள் தொடர்ந்தன.

அவற்றில் இருந்து நேற்று மேலும் ஒன்பது எலும்புக்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ★ அமைச்சரவையிலிருந்து

# காமினியை வெளியேற்றுவதும் புலிகளின் நிபந்தனைகளில் ஒன்று

### முன்னர் நடந்த பேச்சின்போது இணக்கம் காணப்பட்டதாம்

புதுடில்லி, செப். 12

இந்திய அமைதிப்படை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலை கொண்டிருந்த சமயம், விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன் இரு நிபந்தனைகளை விதித்திருந்தனர். அவற்றில் ஒன்று அமைச்சர் காமினி திஸநாயக்கா வெளியேற்றப்பட வேண்டும் என்பதே.

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான அதிருப்தியாளர் கோஷ்டியில் உள்ள எண்மரில் ஒருவரான முன்னாள் அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா செய்தியாளர் மாநாடு ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆயுதங்கள் வழங்கியதாக முன்னாள் அமைச்சர் லலித்அத்துலத்முதலி தெரிவித்த செய்தியாளர் மாநாட்டிலேயே முன்னாள் அமைச்சர் பிரேமச்சந்திராவும் கலந்து கொண்டு மேற்கண்ட விவரத்தைத் வெளியிட்டார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்காவும் கலந்து கொண்டார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கப்பட்டது தொடர்பாக செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

கத்தோலிக்க அவுஸ்திரேலியாவில் வேலை பார்க்கும் 30 வயது மணமகனுக்கு, படித்த அழகான மணமகள் தேவை. மணமகன் மார்ச் மாதம் இலங்கை வந்து திருமணம் செய்து மணமகளை அழைத்துச் செல்வார். தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும். இல. 16, கோவில் வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (17805)

யாழ். இந்து 31 வயது கனடா MSC அக்கவுண்டன், நட்சத்திரம் மூலம், இராசாவம் 10/16, 27 வயது MSC சாட்டட் பொறியியலாளர் U.K. அவுஸ்திரேலியா பிரசா உரிமை பெற்றவர் உயரம் 6' நட்சத்திரம் உத்திரட்டாதி இராசாவம் 8/16 மணமகள் தேவை. தொடர்பு 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. (18079)

32 வயது யாழ். இந்து சைவ வேளாள கனடா B.Sc இலெக்ரோனிக் பொறியியலாளருக்கு படித்த அழகான, சைவ வேளாள மணமகள் தேவை. தொடர்பு: ABCDE 328, ஆனைப்பந்தி (18080)

அவுஸ்திரேலியாவில் வேலை பார்க்கும் பிரஜாவுரிமை பெற்ற B. Sc பொறியியலாளர் பட்டதாரியான, குறைந்த வயதுள்ள இந்து மணமகனுக்கு A/Lக்குக் குறையாத சராதாரமும், 5' 2'' க்குக் குறையாத உயரமும் கொண்ட 25 வயதுக்கு உட்பட்ட அழகிய மணப்பெண் தேவை. தொடர்பு இல. 353, உதயன் யாழ்ப்பாணம். (18086)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 12

வடபிரதேசத்தின் நிர்வாக மையத்துக்கான இடவமைவுத் தெரிவு தொடர்பான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணி முதல், 5 30 மணிவரை யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். (த)

### மக்கள் வங்கி பரந்தன் கிளை

கிளிநொச்சி, செப். 12

மக்கள் வங்கியின் பரந்தன் கிளை பாதுகாப்புக் கருதி தற்காலிகமாக கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியிலுள்ள கட்டடத்தில் செயற்படத் தொடங்கியுள்ளது. (த)

### சாவ. ஆஸ்பத்திரிக்கு குழாய் மூலம் குடிநீர்

தென்மராட்சி செப். 12

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வார்டுகளுக்கு கடந்த திங்கட்கிழமை முதல் குழாய் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது.

நீர் இறைக்கும் இயந்திரத்திற்குத் தேவையான மின்சாரம் புவிகளினால் ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலம் வழங்கப்படுவதால் இதுவரை நாளும் வார்டுகளில் நிலவி வந்த குடிநீர் பிரச்சினை நீங்கியுள்ளது. (வ-11)

### கட்டுப்பாட்டு விலையில் சவர்க்காரம்

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வியாபார நிலையமொன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை பி. சீ. சவர்க்காரம் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்பட்டது. இதனை வாங்க பெருமளவில் நீண்ட வரிசையில் நின்றதையும் அவதானிக்க முடிந்தது. (த-117)

---

10 ஆவது

## பிறந்த நாள் வாழ்த்து

செல்வி

### ★ றஞ்ஜிற் றஞ்ஜித்தா ★

ஆவரங்கால் சண்டிலிப்பாயைச் சேர்ந்த செல்வி றஞ்ஜிற் றஞ்ஜித்தா 12 - 09 - 91 வியாழக்கிழமை தனது 10 ஆவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை கல்வியில் மேம்பட்டு சீரும், சிறப்புமாக வாழ அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அத்தானமார், மச்சாள்மார், மச்சான்மார், தம்பிமார், தங்கை, ஆசை அக்கா, அண்ணா மற்றும் Dr. மாமா குடும்பத்தினர் ஆகியோர் அன்புடன் வாழ்த்துகிறார்கள்.

(18064)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 06 — 10 — 1937

உதிர்வு: 24 — 08 — 1990

### திருமதி அருளம்பலம் நவமணி

திதி: 12 — 09 — 1991

நீ இல்லா வெறுமையினை
நாங்கள் உணருமுன்னே
ஆண்டு ஒன்று சென்றதென்று
நாட்காட்டி பார்த்தரம்மா
நீ இட்ட விதைநாள் இன்று
வளம் கொழித்து நிற்கையிலே
மின்னாமல் மறைந்தனையோ
வேதனையில் வெம்புகின்றோம்
காலங்கள் உருண்டோடினாலும்
உன் நேசமுகம் மறந்திடுமோ

உன் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்:
கணவன், பிள்ளைகள், அண்ணா.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. [18078]

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 20 06 1970

உதிர்வு: 15 - 09 - 1988

திதி: 12 - 09 1991



### சண்முகலிங்கம் பாலமுருகன் [ரகு]

அன்புச் செல்வமே நீ உதிர்ந்து ஆண்டுகள் மூன்று கண்ணீரில் கரைந்த போதும், உன் நினைவுகள் நீங்கவில்லை. நீ உலவுகிறாய் எம்மிடையே உன் ஆத்ம சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்

அப்பா, அம்மா, தம்பிமார், தங்கை
மற்றும் உற்றார், உறவினர்கள்.

உட்டுவில்,
யாழ்ப்பாணம். [17812]

---

யாழ். / மாவட்ட மக்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்

## அரசாங்க எழுதுனர் சேவை
## கிராம அலுவலர் (G.S.) சேவை

யாழ். மாவட்டத்திலுள்ள 500 க்கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான

போட்டிப் பரீட்சை

### விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 14 - 09 - 1991 மு. ப. 9 மணி

பாடநெறி:- மொழித்தேர்ச்சி, பொது உளச்சார்பு

விண்ணப்ப முடிவு திகதி: 30 - 09 - 1991

★ அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 290/- முழுப்பயிற்சிக்கும்
★ விரிவுரைகள் சனியும், ஞாயிறும்

விண்ணப்பப் படிவங்களை நேரில் பெறலாம்.

### ASTAN INSTITUTE

101/10, STANLEY ROAD, - JAFFNA.

(மக்கள் வங்கிக்கு மாடியில்)

[சி-0460]

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 8 - 02 - 1967

மறைவு: 12 - 09 - 1989

செல்வன்

### சிவகுருநாதன் வாசுதேவன் (வாசன்)

ஈராண்டுகள் சென்றாலும் அன்பான எங்கள் வாசனின் நினைவுகள் இன்றும் எம் மனதில் பசுமையாக தவழ்கின்றன!

குடும்பத்தினர்.

மட்டிவடி,
100 கண்டி வீதி, சாவகச்சேரி. (4292)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 04 01 - 1965

அரக்கரின் அழிப்பில்: 24 - 08 - 1990



அமரர்

### பாலசுப்பிரமணியம் விஷ்ணுகரன்

திதி: 12 — 09 — 1991

மண்ணிலிருந்து நீர் மறுமதிவி செல்வதற்கு
மண்டைதீவு நோக்கி வந்த
வெறியர்கள் தான் கடுகதி விமானமையா?
ஓராண்டு மட்டுமல்ல; உவ்விடம் வருமளவும்
ஓயாது கண்ணீர்! அழுதழுது வாடுகிறோம்
இறைவன் பாதநிழலில் இளைப்பாறி நீரும்பீர்!
பாசமுடன் நெஞ்சில் பட்டமெழுதி நாமிருக்கின்றோம்!
நினைவுமலர் தூவி நித்தமுமை அஞ்சலிப்போம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
உற்றார், உறவினர்கள்.

வேலணை வடக்கு,
வேலணை. [18010]

---

யாழ். பல்கலைக்கழக

## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

✶ கலை முதற் தேர்வு (G. A. Q.)
☆ வணிக முதற் தேர்வு (I st in Com)

பிரத்தியேக
**பொருளியல் வகுப்பு**
**S. வரதராஜன் B. A: (Hons)**

ஆரம்பம்: 14 - 09 - 1991 சனி 5-00 p m.

குறிப்பு:- மாணவிகள் மட்டுமே இவ் வகுப்புகளுக்கு அனுமதிக்கப்படுவர்.

### பொருளியல் கல்வி நிலையம்,

200, பிரதான வீதி, சுண்டிக்குளி.
(சென்ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

(சி-0482)

---

## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

யாழ்ப்பாண - பேராதனை பல்கலைக்கழக

★ கலை முதற் தேர்வு G. A. Q
★ வர்த்தக முதற் தேர்வு - 1st in Com.

A/Lல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ யாழ்ப்பாண பல்கலைக் கழக
விண்ணப்ப முடிவு திகதி:
30 - 09 - 1991
இதற்கான விரிவுரைகள் ஆரம்பம்:
14 - 09 - 1991
[காலை 8 - 00 மணி]

★ பேராதனை பல்கலைக்கழக
விண்ணப்ப முடிவு திகதி:
05 - 10 - 1991
இதற்கான விரிவுரைகள் ஆரம்பம்:
05 - 10 - 1991
[காலை 8 - 00 மணி]

★ பதிவுகள், விரிவுரைகள் பற்றிய விவரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

### புதிய உயர் கல்லூரி

*New College of High Studies*

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி/0448)

---

## காணவில்லை

### திருமதி இராசதுரை கனகேஸ்வரி



படத்தில் காணப்படும் இவரை 28 - 08 - 1991 முதல் காணவில்லை. 33 வயதானவர். இரு பிள்ளைகளின் தாயார். 5 அடி 4 அங்குல உயரமும் பொது நிறமும் கொண்டவர் புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இனி தொச்சிசெல்வாநகரில் வசித்து வந்தார். கடைசியாக காணப்பட்டபோது மஞ்சள் சாறியும் பச்சை சட்டையும் அணிந்திருந்தார். சிறிது மனக்குழப்பம் அடைந்திருந்தார். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தோர் தொடர்பு கொள்ளவும்:

பரீஸ் ரெக்ஸ் ரையில்,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது
சிறிய தந்தையார்,
சி. த. சின்னத்தம்பி,
புங்குடுதீவு-2.

தகுந்த சன்மானம் வழங்கப்படும். [18088]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### வேலூர் மாநாடு

இந்தியாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வது குறித்து இந்திய மத்திய அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருவதாக புதுடில்லிச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

ராஜீவ் கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் விசேட புலனாய்வுக் குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய உள்ளனர் என்று மற்றும் ஒரு செய்தி கூறுகிறது.

1987 இல் இருந்து தமிழீழ மக்கள் மீது இந்தியாவினால் பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. அதன் தொடரே தற்போதைய நடவடிக்கைகளும் ஆகும்.

கடந்த வாரம் வேலூரில் நடைபெற இருந்த தமிழீழ ஆதரவு மாநாட்டுக்குத் தடைவிதிக்கப்பட்டதும் விடுதலைப் புலிகள் என்ற பெயர்ப்பட்டியல் சூட்டி, தமிழ் நாட்டிலும் மற்றும் மாநிலங்களிலும் அப்பாவித் தமிழீழ மக்கள் கைதாகி வருவதும் இந்தியாவின் போக்கு எத்தகையது என்பதை மிகத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன.

இந்தியா எந்தவிதமான அழுத்தங்களைப் பிரயோகித்தாலும், அதனால் பயன் ஏற்படப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

கடந்த காலச் சம்பவங்கள் இதற்குச் சான்று.

1983 இனக்கலவரத்தின் போது இந்தியா முதற்தடவையாக இலங்கை இனப் பிரச்சினையில் தலையிட்டது. அப்போதைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி காலத்தில் தமிழ் போராளிகள் குழுக்களுக்கு ஆயுதங்களும் வழங்கப்பட்டு பயிற்சியும் அளிக்கப்பட்டது.

இந்த ஆதரவு நிலை 1984 திருமதி இந்திரா காந்தி கொலையுடன் மாற்றம் அடைய ஆரம்பித்தது எனலாம்.

1987 இல் இந்தியா தனது சொந்த நலன் கருதி இலங்கை — இந்திய ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு அதனை அமுல் நடத்த முயன்றபோது முதற்தடவையாக முரண்பாடு வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்தது. ஒப்பந்தத்தை எதிர்த்து, தமிழீழ மக்களின் நலன்பேண விடுதலைப் புலிகள் முற்பட்டபோது மோதல் ஆரம்பமானது.

இன்று இந்த முரண்பாடு பல்வேறு கட்டங்களைத் தாண்டி ஈழத் தமிழ்மக்களுக்கு எதிராக முழு அளவில் திரும்பி இருக்கிறது.

தமிழீழ மக்களின் பிரச்சினையை இந்திய அரசியல் வாதிகள் தமது அரசியல் சதுரங்க விளையாட்டுக்குப் பயன்படுத்தி வருவதே இந்தியாவின் போக்கு காலத்துக்குக் காலம் மாறி வரக் காரணம் ஆகும்.

பொதுத்தேர்தலில் வாக்குப் பெறுவதற்காக தமிழகக் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு ஈழத் தமிழ் போராளிகள் குழுக்களை அணைத்துக்கொண்ட காலம் இருந்தது. எந்த நோக்கத்துக்காக அப்போது அணைத்தார்களோ அதே நோக்கத்துக்காக தற்போது உதறித் தள்ளும் நிலையில் இந்திய அரசியல் வாதிகள் — குறிப்பாக தமிழ்நாட்டு அரசியல் வாதிகள் இருந்து வருகிறார்கள்.

அதற்கு ஏற்றவாறு தமிழ் நாட்டு மக்களை விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் திருப்பிவிடுவதில் மத்திய அரசும் தமிழ் நாடு மாநில அரசும் திட்டமிட்டுச் செயற்படுகின்றன.

தற்போதைய நிலை தற்காலிகமானதே என்பதற்கு வேலூரில் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் ஏற்பாடாகி இருந்த தமிழீழ ஆதரவு மாநாடு சான்றாகும்.

---

பொருள்களை வடக்கே எடுத்துவர

# கூட்டுப்படையே தொடர்ந்து அனுமதி வழங்குகின்றதாம்!

யாழ்ப்பாணம், செப். 22

அத்தியாவசியப் பொருள்களை வடக்கே அனுப்புவதற்கான அனுமதி வழங்கும் அதிகாரம் தொடர்ந்தும் கூட்டுப்படை தலைமையகத்தின் 'கைவசமே' உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுப்படையிடம் இருந்த இந்த அதிகாரம், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா ஜனாதிபதி அண்மையில் அறிவித்திருந்தார்.

ஆனால் இது செயல்வடிவம் பெற்றதாகத் தெரியவில்லை. கூட்டுப்படைத் தலைமையகம் அதை 'விட்டுக்கொடுப்பதாக' இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அனுமதிப் பத்திரம் வழங்கும் விடயத்தில் லஞ்ச ஊழல் இடம்பெற்றதாக தகவல்கள் வெளியாவதை அடுத்தே அனுமதி வழங்கும் அதிகாரம் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு மாற்றப்பட்டது.

எனினும் இந்த விவகாரத்தில் தொடர்ந்து அதிகாரம் கூட்டுப்படைத் தலைமையகத்திடமே இருப்பதாகத் தெரிகிறது.

பழைய ஏற்பாட்டின்படி வடக்கே பொருள்களை எடுத்து வருவோர், கூட்டுப்படைத் தலைமையகத்துக்கு நேரடியாகச் சென்று விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து தேவைகளின் அவசியம் குறித்து கலந்துரையாட வசதிகள் இருந்தன.

ஆனால் நிலைமை இப்போது வேறாக உள்ளது.

குறிப்பாக, அரச திணைக்களங்கள் தமக்குத் தேவையான பொருள்களின் பட்டியலை அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் சமர்ப்பிக்கின்றன. அந்தப் பட்டியலை அத்தியாவசிய சேவைகள் நாயக அலுவலகம், கூட்டுப்படைத் தலைமையகத்துக்கு அனுப்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரிசி, சீனி, மா ஆகியன தவிர்ந்த ஏனைய பொருள்களுக்கான அனுமதியை கூட்டுப்படைத் தலைமை அலுவலகமே வழங்குகிறது. பொருள்களை வடக்கே கொண்டுசெல்வது தொடர்பான அனுமதியை வழங்குவதில் அதுவே "இறுதி முடிவை" எடுக்கின்றதாம்.

இது ஒரு மறைமுகமான பொருளாதாரத் தடை நடவடிக்கை என்று தமிழர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

### இன்று சதுர்த்தி

யாழ்ப்பாணம், செப். 12

குடாநாட்டில் உள்ள விநாயகர் ஆலயங்களில் இன்று ஆவணி சதுர்த்தித் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது.

விசேட அபிடேகங்கள், பூசைகள் உட்பட பல ஆலயங்களில் அலங்காரத் திருவிழாக்கள் இடம்பெறும்.

தொல்புரம் மடத்துப் பிள்ளையார் கோவில், வட்டுப் பிளவத்தை ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம் உட்பட பல பிள்ளையார் கோவில்களில் தேர்த்திருவிழாவும் நடைபெற உள்ளது.

ஈச்சமோட்டை வட்டிப்புலம் ஞானவைரவர் ஆலயச் சதுர்த்தித் திருவிழாவில் "செஞ்சோற்றுக்கடன் தீர்த்தவர் கும்பகர்ணனா அல்லது கர்ணனா?" என்ற தலைப்பில் பட்டிமன்றமும் கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் தலைமையில் நடைபெறும். [அ-28 30]

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 12

தியாகி திலீபன் நினைவு தடகள விழாவின் மாவட்ட மட்டப் போட்டிகள் தொடர்பான கலந்துரையாடல், நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொண்டாவிலில் உள்ள வி. பு. ம. முன்னணியின், யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

விளையாட்டு உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், வட்டார விளையாட்டுப் பொறுப்பாளர்கள் ஆகியோரை இதில் கலந்து கொள்ளுமாறு வி. பு. ம. முன்னணி கேட்டுள்ளது. [ஓ]

### 'கற்கை வட்ட செயலமர்வு'

யாழ்ப்பாணம், செப். 12

பயிலுநர் ஆசிரியர்களுக்கான 'கற்கை வட்டச் செயலமர்வு' எதிர்வரும் சனிக்கிழமை யாழ் மாவட்டத்தில் உள்ள பகுதி ஆசிரியர் பயிற்சி நிலையங்களிலும் ஏககாலத்தில் நடைபெறும்.

(த-11)

### உங்களுடையதா?

யாழ்ப்பாணம், செப். 12

நல்லூர் உற்சவ காலத்தில் வீதியில் கிடந்து கண்டெடுக்கப்பட்ட கைக்கடிகாரங்கள், 'பேர்ஸ்'கள் மற்றும் அடையாள அட்டைகள் போன்றவை யாழ். மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் உள்ளன.

தகுந்த ஆதாரங்கள் காட்டி, உரியவர்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-3)

### கைதாகி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வில் உள்ள தமிழருக்கு சுயநிர்ணய உரிமை வழங்குவது ஆகிய கொள்கைகளைக் கொண்டுள்ள அமைப்புகளினால் அந்த தமிழீழ மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டது.

சுதந்திர ஈழத்தையும், இந்தியத் தமிழருக்கு சுயநிர்ணய உரிமையையும் வழங்க வேண்டும் என்று வாதாடும் பல அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்குபற்ற இருந்தனர். இந்த அமைப்புகளில் சில வருமாறு:-

★ தமிழ் தேசிய இயக்கம்

★ பெருஞ்சித்திரனார் தலைமையிலான உலகத் தமிழ் தேசிய முற்போக்குக் கட்சி.

★ ராமதாஸ் தலைமையிலான தமிழ் தேசிய விடுதலைக் கட்சி.

★ மணியரசன் தலைமையிலான தமிழ் மன்ன கம்யூனிஸ்ட் கட்சி.

★ சாலை சாலினி இளந்திரையனின் தலைமையிலான புத்தி ஜீவிகள் அரங்கு.

★ அரங்க குணசேகரன் தலைமையிலான தமிழக மனித உரிமைகள் கட்சி.

★ ஜெயச்சந்திரன் தலைமையிலான முற்போக்கு இளைஞர் முன்னணி.

★ முகிலனின் புரட்சிகர இளைஞர் அணி.

★ செந்தில்நாதன் தலைமையிலான தமிழ்நாடு மக்கள் ஸ்தாபனம்.

★ முத்துச் செல்வனின் அடக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி.

★ திரன் தலைமையிலான தமிழர் ஜனநாயகக் கட்சி.

★ இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட், லெனினிஸ்ட் செங் கொடிக் கட்சி.

தமிழ் நாட்டின் விடுதலைக்காக தமிழ் நாட்டில் உயிர் இழந்த தமிழர்களுக்காக [illegible]

### காமினியை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விகளும், பதில்களும் வருமாறு:-

கேள்வி: விடுதலைப் புலிகளுடன் உங்களைத் தொடர்புபடுத்தி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளனவே?

லலித்: முட்டாள்தனமானது அது.

காமினி: மக்களின் அறிவை முற்றாக அவமதிப்புச் செய்வதாக இது அமைந்துள்ளது.

லலித்: விடுதலைப் புலிகளையும் இது அவமதிப்பதாக உள்ளது. விடுதலைப் புலிகளுக்கு யார் ஆயுதம் கொடுத்தார்கள்? இந்திய அமைதிப்படையை எதிர்ப்பதற்காக விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்க முடிவு செய்திருப்பது தனக்கு குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாக மறைந்த ரஞ்சன் விஜேரத்தினா என்னிடம் முறையிட்டார்.

காமினி: ஆயுதங்களும் வெடி மருந்துகளும் மட்டும் அல்ல. வாகனங்களும் புலிகளுக்கு அப்போது கொடுக்கப்பட்டன. பதுங்கு குழிகள் கட்ட சீமெந்தும், புலிகளுக்கு கொடுக்கப்பட்டன. இலங்கையில் இருந்து வாபஸ் வாங்குவதாக அமைதிப்படை அறிவித்த பின்னரும் அமைதிப் படையை எதிர்த்துச் சண்டையிட அவை புலிகளுக்கு வழங்கப்பட்டன.

லலித்: ஆனையிறவில் மரணமடைந்த கோப்பரல் காமினி குலரத்தினவின் தாயாரிடம் "இன்று 50 ஆயிரம் ரூபாவை கையளிக்கையில் முன்னைய பேச்சுக்களின் போது அரசு விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய ஆயுதங்களால் தான் கோப்பரல் குலரத்தினா கொல்லப்பட்டாரா என்ற கேள்வி என் மனதில் எழுந்தது.

முன்னாள் அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திர: அரசுடன் பேச்சுகள் நடத்த விடுதலைப் புலிகள் இரண்டு நிபந்தனைகளை விதித்தனர். ஒன்று, அமைதிப்படை வெளியேற வேண்டும். மற்றது அமைச்சரவையில் இருந்து காமினி திஸநாயக்காவை வெளியேற்ற வேண்டும். 'அமைதிப்படை வெளியேறாவிட்டால் என்ன செய்வது?' என்று பேச்சு வார்த்தையின் போது புலிகளிடம் கேட்கப்பட்டது. அதற்கு விடுதலைப் புலிகள், "ஆயுதங்கள் தாருங்கள், அமைதிப்படையை எதிர்த்துப் போராடுவோம்" என்று பதிலளித்தனர்.

ஆயுதங்கள் வழங்கப்பட்டன. அமைதிப்படை வெளியேறியது. விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் சண்டையை ஆரம்பித்தனர்.

லலித்: பாதுகாப்பு அமைச்சராக நான் இருந்த வரை புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்படவில்லை.

கேள்வி: புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்குவது என யார் முடிவு செய்தார்கள்?

லலித்: ரஞ்சன் விஜயரத்தினா முடிவு செய்யவில்லை.

பிரேமச்சந்திர: அமைச்சரவைக் கூட்டத்திற்கு வெளியார் எவரும் வரமுடியாது. ஆனால் அமைச்சரவைக் கூட்டங்களில் ஆரம்பம் முதல் முடிவு வரை திரு. பாஸ்கரலிங்கம் இருப்பார்.

லலித்: விசாரணை ஒன்று நடைபெறின் விடுதலைப்புலிகளுக்கு அரசினால் ஆயுதங்கள் வழங்கப்பட்டது குறித்து [illegible] அதிகாரிகள் சாட்சியமளிப்பார்கள்.

(இ-எ)

---

# யுத்தம் தொடருவதையே லலித் குழு விரும்புகிறதாம்!

## செய்தியாளர் மாநாட்டில் தகவல்

கொழும்பு, செப். 12

நாட்டில் ஸ்திர நிலைமை ஏற்பட வடக்கு-கிழக்கில் யுத்த முயற்சி தொடர வேண்டும் என நாம் விரும்புகிறோம்.

கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாடு ஒன்றில் ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா இப்படிக் கூறினார்.

காமினி திஸநாயக்கா மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து, பொதுவான திட்டம் ஒன்றை நாம் தயாரிப்போம்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஒன்றரை ஆண்டு காலமாக நடந்த பேச்சுக்களின் விவரம் அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் அமைச்சரவையிலும் வெளியிடப்படவில்லை.

காவினோக்களும், ஜாக்பொட்களும் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா காலத்தில் தான் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. கொழும்பு மாநகரசபையின் அதிகாரத்தின் கீழ் தான் அவை இருந்து வந்தன. அக்காலத்தில் கொழும்பு மாநகர சபையின் மேயராக இருந்தவர் யார்? உள்ளூராட்சி அமைச்சராக இருந்தவர் யார்?

இப்படி திரு. காமினி திஸநாயக்கா கேட்டார்.

(இ-எ)

8 ஆண்டு காலத்தில்

# ரூ. 55 லட்சம் பெறுமதிக்கு லலித் சொத்து வாங்கினார்!

## மாவட்ட நீதிமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 12

1980 தொடக்கம் 1988 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி 55 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் மற்றும் பொருள்களை வாங்கினார் என்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

சுதந்திரக் கட்சி எம். பி. திரு. சி. வி. குணரத்தின தமக்கு எதிராக திரு. லலித் அத்துலத்முதலி தொடர்ந்திருக்கும் மான நட்ட வழக்கில் சாட்சியமளிக்கையிலேயே முற்கண்ட தகவலை வெளியிட்டார். [த-எ]

# இந்திய மீனவர் கச்சதீவில் மீன் பிடிக்க முடியாது!

## மத்திய அமைச்சர் கூறுகிறார்

புதுடில்லி, செப். 12

1974 ஆம் ஆண்டு கச்சதீவு தொடர்பாக ஸ்ரீலங்கா - இந்திய அரசுகள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி கச்சதீவில் இந்திய மீனவர்கள் ஓய்வு எடுக்க அனுமதிக்கப்பட வேண்டும்; ஆனால் அவர்களுக்கு இந்தப் பகுதியில் மீன் பிடிக்க உரிமை இல்லை.

இவ்வாறு இந்திய மத்திய வெளியுறவு இணை அமைச்சர் எட்வர்டோ பெலரோ நேற்று ராஜ்ய சபையில் கேள்வி நேரத்தின் போது உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இந்திய மீனவர் பிரச்சினையை ஸ்ரீலங்கா அரசு மனிதாபிமான அடிப்படையில் நோக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

[உ-எ]

முன்னாள் கி. ஜேர்மன் அதிபர்

# ஹோனேக்கரை கையளிக்க சோவியத் இணக்கம்

மாஸ்கோ, செப். 12

முன்னாள் கிழக்கு ஜேர்மனியின் ஜனாதிபதி எரிக் ஹோனேக்கரை ஜேர்மனியிடம் கையளிக்க சோவியத் யூனியன் முன் வந்துள்ளது.

இது தொடர்பாக ஜேர்மனிக்கும், சோவியத் யூனியனுக்கும் இடையே கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கு ஜேர்மனியின் ஜனாதிபதியாக இருந்த சமயம் பேர்லின் சுவரைக் கடந்து மேற்கு ஜேர்மனுக்கு தப்பிச் செல்லும் கிழக்கு ஜேர்மனியினரைச் சுடும்படி திரு. ஹோனேக்கர் தனது படையினருக்கு உத்தரவிட்டிருந்தார். அதற்காக அவரை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென்று ஐக்கிய ஜேர்மன் அரசு தீர்மானித்துள்ளது.

முன்னாள் கிழக்கு ஜேர்மனியில் கம்யூனிஸ்ட் ஆட்சி கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, திரு. ஹோனேக்கருக்கு சோவியத் நாட்டில் தஞ்சமளிக்கப்பட்டது. [த-எ]

### 10 மனித...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூடுகளும் நேற்று புதிதாக தோண்டப்பட்ட கிணறு ஒன்றில் இருந்து ஓர் எலும்புக்கூடும் வெளியே எடுக்கப்பட்டன.

நேற்று மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளின் மேல் பாறாங்கற்களும் காணப்பட்டன.

அண்மையில் மண்டைதீவில் நடந்த இராணுவ நடவடிக்கையின்போது ஸ்ரீலங்காப் படையினரால் கொல்லப்பட்ட அப்பாவிகளின் எலும்புக்கூடுகளே இவை என்று தெரிவிக்கப்படுகிறது

(ஓ-167)

### மணலாற்றில் நேற்றும் மோதல்

மணலாற்றுப் பகுதியில் நேற்றும் மோதல் இடம்பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காட்டுப் பகுதியினுள் நுழைய முயற்சிக்கும் ஸ்ரீலங்காப் படையினருடன் உக்கிரமான சண்டை நடந்து வருவதாகவும்—

குண்டு வீச்சு விமானக் குண்டு வீச்சினால் அப்பகுதிகளில் பெரும் சேதங்கள் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மணலாறு மோதலில் இதுவரை 23 படையினர் உயிரிழந்ததாக ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஓ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி. கிழக்கு (வ. ப) ப. நோ. கூ. சங்கம்

### கூறுவிலை கோரல்

### வேப்பமரக்குத்திகள் விற்பனை

மேற்படி எமது சங்கத்துக்குச் சொந்தமான 10(பத்து) வேப்பமரக்குத்திகள் கேள்விக் கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. ஆவரங்கால் வெங்காயச் சங்க வளவிலும், புத்தூர் மொத்த விற்பனை நிலைய வளவிலும் மேற்படி மரங்களைப் பார்வையிட்டு தங்களது கூறுவிலையை தாங்களே மாதிரி விண்ணப்பப் படிவம் தயாரித்து எழுதி சங்கத் தலைமைப் பணிமனை இராச வீதி, அச்சுவேலி என்னும் விலாசமிட்டு தலைமைப் பணிமனையில் நேரடியாக ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். விண்ணப்பமுடிவு திகதி 16 - 09 - 1991 முற்பகல் 10 - 00 மணி.

இங்ஙனம்

(சி/0508) - பொதுமுகாமையாளர்.


# சிங்களம் மட்டும் சட்டத்தால் பாதிக்கப்பட்டோருக்கு சலுகை

## 35 வருடங்களின் பின் அரசு நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 12

முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு பலவிதமான நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் இப்போது முடிவு செய்திருக்கிறது!

சிங்களத்தில் தேர்ச்சி பெறாத காரணத்தால் பதவி உயர்வுகளை இழந்தவர்களுக்கு அவற்றை வழங்கவும்—

அதே காரணத்தினால் உரிய காலம் வருமுன் சேவையிலிருந்து இளைப்பாறிய ஊழியர்களை மீண்டும் வேலையில் சேர்க்கவும்— அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

இது சம்பந்தமாக பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர், 1991 ஆகஸ்ட் 23 ஆம் திகதியிடப்பட்ட 37/91 ஆம் இலக்கச் சுற்று நிருபம் மூலம் சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும் அறிவித்திருக்கிறார்.

அந்தச் சுற்று நிருபத்தின் பிரகாரம்—

★ தற்போது பதவியிலிருக்கும் அரச ஊழியர் எவருக்கும் சிங்களத்தில் தேர்ச்சி பெறாத காரணத்தினால் பதவி உயர்வுகள் நிறுத்தப் பட்டிருப்பின், இவ்வருடம் ஜூன் மாதம் 5 ஆம் திகதியிலிருந்து மீண்டும் பதவி உயர்வுகள் கிடைக்கும்.

★ சிங்களத்தில் தேர்ச்சி பெறவில்லை என்பதால் உரிய காலம் வருமுன் ஓய்வு பெற்றவர்களையும், சேவையிலிருந்து நீக்கப்பட்டவர்களையும் 5 - 6 - 91 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் சேவையில் அமர்த்தலாம்.

— எனினும் அதற்கு மீண்டும் சேவையில் அமர்த்தும் செயலாளர்கள் குழுக்களின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

— பத்து வருடங்களுக்கு மேற்பட்ட சேவையுடையோர் சிங்களத்தில் தேர்ச்சி பெறவில்லையெனினும் பதவி நிரந்தரமாக்கப்படுவர்.

★ சிங்களத் தேர்ச்சி பெறாத காரணத்தால் இளைப்பாறிய அல்லது பதவி விலக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் இறந்திருந்தால் அவர்களின் உரித்துடையோருக்கு 5 - 6 - 91 தொடக்கம் மரணப் பணிக்கொடை வழங்கப்படும்.

அரசமைப்புச் சட்டத்திற்கான 13 ஆம் 16 ஆம் திருத்தங்களின் கீழ் இந்த நிவாரணங்களை வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது.

## ராஜீவ் கொலைச் சம்பவம்; 400 பேர் வரை விசாரணை

புதுடில்லி, செப். 12

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலைச் சம்பவம் தொடர்பாக இதுவரை 9 இலங்கைத் தமிழர் உட்பட 16 பேர் விசேட புலனாய்வுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இத்தகவலை மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் நேற்று ராஜ்ய சபையில் வெளியிட்டார்.

ராஜீவ் கொலை தொடர்பாக 400 பேர் வரையில் விசாரிக்கப்பட்டனர். 52 இடங்கள் சோதனையிடப்பட்டன. ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன என்றும் இணையமைச்சர் ஜேக்கப் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார். (ஒ-எ)

## ஊழல் குற்றஞ் சாட்டப்பட்ட பெனாஸிரின் கணவர் மேல் நீதிமன்றால் விடுதலை

ஊழல் குற்றச் சாட்டின் மீது காவலில் வைக்கப்பட்டிருந்த ஆஸிப் அலிசர்தாரியை சிந்து மேல் நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

இவர் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் திருமதி பெனாஸிர் பூட்டோவின் கணவர் ஆவார்.

பெனாஸிரின் அரசு கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி ஏற்பட்டபோது ஆஸிப் அலி சர்தாரி கைது செய்யப்பட்டார். அவர் மீது அதிகார துஷ்பிரயோகம் உட்பட ஊழல் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

காவலில் வைக்கப்பட்டிருந்த சமயம் அவர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு எம். பி.யாக தெரிவு செய்யப்பட்டார். [த-எ]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 12

மணலாறுப் பகுதியில் தொடர்ந்து இடம்பெற்று வரும் மோதல்களில் கடந்த 9 ஆம் திகதி விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 10 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

செல்வரூபி (பொன்னையா காளியம்மா—இலுப்பையடிச் சோலை, மட்டக்களப்பு.

திலீப் (மார்க்கண்டு இளங்கிரன் — ஆவரங்கால்), சாந்தினி (நாகலிங்கம் ஜெகசோதி — தம்பிலுவில்), மலைமகன் (பிள்ளையான் வளர்மதி—கிரான், மட்டக்களப்பு), காயத்திரி (இரத்தினம் இந்திராதேவி — அக்கரைப்பற்று). அரசன் (செல்லத்தம்பி பரமேஸ்வரன் — வாழைச்சேனை), கலையரசன் அல்லது மிதுலன் (குமாரசிங்கம் குணரஞ்சன் — வவுனியா), வாசு (இராசலிங்கம் ஜெயராஜ் ஞானரஞ்சித்—கரவெட்டி மேற்கு), ஜெகதிஸ் (பெருமாள் தங்கராசா—கிளிநொச்சி), மேகன் (ஜெகநாதன் நிர்மலநாதன் —தொண்டமானாறு) ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தவர்களாவர்.

(உ-5)

## தடுப்பூசி போடும் வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப் 12

யாழ். போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவில் கடந்த திங்கட்கிழமை முதல் விசர் நாயக்கடிக்கான தடுப்பூசி, மற்றும் சிறு குழந்தைகளுக்கான போலியோ தடுப்பு மருந்து போடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டம் உட்பட கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கும் இம் மருந்துகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, யாழ் மாவட்டசுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

(த-15)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப். 12

கந்தர்மடம் ஆத்திகுடி விதி ஸ்ரீசித்தி விநாயகர் கோவில் கும்பாபிஷேகம் இன்று காலை 7 மணிக்கு நடைபெறும். (த)


# பாரதிதாசன்

## கல்வி நிறுவனம்

(BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். பல்கலைக்கழக

**வெளிவாரிப் பட்டப்படிப்புகள்**

**G. A. Q; 1st in Com.**

★ பொருளியல் ★

S. வரதராஜன் B. A. (Hons)

ஆரம்பம்: 15 - 09 - 1991 ஞாயிறு

பிரிவு I 11.00 a. m.

பிரிவு II 1.00 p. m.

முக்கிய குறிப்பு:

1. மாணவர்கள் முன்கூட்டியே அனுமதி பெறல் வேண்டும். விரிவுரைகள் ஆரம்பமாகிய தினத்திற்குப் பின்னர் அனுமதிகள் வழங்கப்படமாட்டா.
2. விரிவான பாடத்திட்டக் குறிப்புகள்; மாதிரி வினாத்தாள்கள் என்பன ஆரம்ப விரிவுரையின் போது வழங்கப்படும்.

[சி-0486]


## 45ஆம் நாள் நினைவஞ்சலி



ஜனனம்: 14 — 11 — 1973

வீர மரணம்: 30 — 07 — 1991

### வீரவேங்கை நியாஸ்

(செல்வரத்தினம் சங்கர்)

அல்லும் பகலும் பூகவராயர்
அடியினில் உறைந்தோய்
சொல்லும் செயலும்
அவரிடைத் தோய்ந்த சோதிச் சங்கரே
தமிழ் மண் மீட்டிடும் தாயகப் போரிலே
போர்ப் பயிற்சி கொடுத்துப்
போர் வீரரை உயர்த்தியும்
களம் பல புகுந்தும் வாகை பல சூடிய
சங்கா எம்முள்ளமெலாம் தழலாய் எரியுதே
கலங்கா வேங்கைக்குள் காவியம் படைத்தாய்
கைதடி நுணாவிலின் கலங்கரை விளக்கானாய்
ஆனையிறவுப் போரிலே மான வீரனாய்
வீர சுவர்க்க மடைந்த வித்தக மாவீரா
தமிழ் ஈழம்காண தம்முயிர்
நீத்த வேங்கைகளெல்லாம்
நலன் காண வேண்டி
நாமெல்லாம் இறைஞ்சுவோமே!

அம்மா, அப்பா, அக்கா, அண்ணா,
மற்றும் உறவினர்கள்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

[18090]

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 04 — 08 — 1922

அரக்கர் பிடியில்: 24 — 08 — 1990

அமரர்

### காசிப்பிள்ளை சுப்பிரமணியம்

[சரவணை கிழக்கு]

திதி: 12 — 09 — 1991

கண்ணை இமை காப்பது போல்
எம்மை வண்ணமுறக் காத்து வந்தீர்
காலமெலாம் உம் நிழலிருக்க
காலனுக்குத்தான் பொறுக்கவில்லை
கழிந்து விட்டது ஓராண்டு ஆயினும்
எம் கண்ணீர் வெள்ளம் குறையவில்லை
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

ஓடை லேன்,
யாழ்ப்பாணம்.

[18089]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நமசிவாயம் நாகம்மா

கரம்பொன் மேற்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திருமதி நமசிவாயம் நாகம்மா 11 - 09 - 91 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற நமசிவாயத்தின் அன்பு மனைவியும், குமாரசாமி (குமாரன்), துறைமுகக் கூட்டுத்தாபனம்), புஷ்பவதி (புஸ்பம்], பாலகிருஷ்ணன் (பாலா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பொ. முருகேசு, திருமதி குமாரசாமி, திருமதி ஈஸ்வரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12 - 09 - 91 இன்று காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

ந. பாலகிருஷ்ணன் (மகன்)

51/1, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்

(18087)

### சின்னத்தம்பி அழகையா

15 ஆம் கட்டை, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி அழகையா 8-9-91 ஆம் திகதி கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற இரத்தினம்மாவின் அன்புக்கணவரும், ஜெகதீஸ்வரி [கனடா], ஜெகதீஸ்வரன் [பிள்ளையார்] (பிரான்ஸ்), ஞானேஸ்வரி (ஞானம்) [கனடா], ஞானேஸ்வரன் [சிங்கன்] [கனடா], யோகேஸ்வரி [உடுப்பிட்டி] ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் லங்கா புளோறிஸ் [LANKA FLORISTS] 941, மருதானை வீதி, புஞ்சி பொரளையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அன்னாரது ஈமக்கிரியைகளைப் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் தருபவர்கள்:

சி. காசிவிசுவநாதன்,

திருமதி இந்திரா ஸ்ரீரங்கநாதன்.

(18089)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12 - 09 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org